(2) செங்கை மாவட்டம், முட்டுக்காடு உடல் ஊனமுற்றோர் தொழிற்பயிற்சி உற்பத்திக் கூடத்தின் பணியாளர்கள் நிருவாகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கோரிக்கைகளை நிறைவேற்றாமையைக் கண்டித்து 23—2—1981 முதல் சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகம் முன் உண்ணா நோன்புப் போராட்டம் மேற்கொண்டது குறித்து.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்காணும் நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"செங்கை மாவட்டம், முட்டுக்காடு கிராமத்திலுள்ள உடல் ஊனமுற்றோர் தொழிற்பயிற்சி உற்பத்திக் கூடத்தில் பணிபுரியும் ஊழியர்கள் கடந்த ஆண்டு ஜூலைத் திங்களில் போராட்டம் நடத்தியதற்குப் பின் தொழிலாளர் நல ஆணையர் முன் நடந்த ஒப்பந்தத்தில் நிர்வாகம் ஒப்புக் கொண்டவாறு கோரிக்கைகளை நிறைவேற்றாமையைக் கண்டிக்கும் வகையில், உடல் ஊன முற்றோர் ஆண்டாகிய இவ்வாண்டில் 23—2—1981 முதல் சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகத்தின் முன்னே உண்ணா நோன்புப் போராட்டம் நடத்தியது குறித்து."

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் இது குறித்து விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: செங்கை மாவட்டம் முட்டுக்காடு கிராமத்தி லுள்ள உடல் ஊனமுற்றோர் தொழிற் பயிற்சிக் கூடத்தைச் சார்ந்த ஊழியர்கள் சென்ற ஆண்டு ஜூலைத் திங்களில் போராட்டம் நடத்தியதற்குப் பிறகு தொழிலாளர் நல ஆணையர் முன் நிர்வாகம் ஒப்புக்கொண்டவாறு கோரிக்கை களை நிறைவேற்றாமையைக் கண்டிக்கிற வகையில் இது நடைபெற்றிருக் கிறது. இதுபற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை, சென்ற கூட்டத் தொடரின்போது கொண்டு வந்தபோது, தொழிலாளர் நல ஆணையர் முன் ஒரு உடன்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது, அதன்படி இன்னின்ன சலுகைகள் வழங்கப்பட உள்ளன என்று குறிப்பிட்டார்கள். அது 23–7–1980 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலானது. அந்த ஒப்பந்தத்தின் படி ஒப்புக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை, அந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தவில்லை என்ற காரணத்தால், அதற்குப் பிறகு இந்த உண்ணா நோன்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு

@ 418ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செங்கை மாவட்டம், முட்டுக்காடு உடல் ஊனமுற்றோர் தொழிற் பயிற்சி உற்பத்திக் கூடத்தின் பணியாளர்கள் நிருவாகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கோரிக்கைகளை நிறைவேற்றாமையைக் கண்டித்து 23—2—1981 முதல் சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகம் முன் உண்ணா நோன்புப் போராட்டம் மேற்கொண்டது குறித்து

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 மார்ச் 26

4—3—1981 அன்று ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே இந்த ஒப்பந்தத்தையாவது இன்னொரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இதுகுறித்துக் கொண்டு வருவதற்கு முன் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை இந்த அரசு கண்டிப்பாகப் பரிசீலிக்கும்.

4. 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. எஸ். முத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகிற வாய்ப்பினை அளித்த தங்களுக்கு நான் முதலில் என நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், நமது மாநிலத்தில் பொதுவாக, எந்தெந்தக் காரியங்களை அரசு அவசர அவசரமாக முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அந்தந்தக் காரியங்களுக்காகத் தேவையான பண ஒதுக்கீடு செய்து, பல்வேறு மாவட்டங்களிலும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அதற்காக முதலில் இந்த அரசுக்கு

(முற்பகல் 10-20)

நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்வேன். மதுரை மாநகரில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி மதுரை மாநகருக்குப் பெருமை தேடித் தந்ததோடு, உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையிலே அமைத்ததற்காக ஒரு கோடி ரூபாயை இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியிருப்பதற்காக இந்த அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 35 கோடி ரூபாய் செலவில் மதுரை மாவட்டத்தில் ஒரு சிமெண்ட் ஆலையை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போலவே அரசு மருத்துவமனையில் உடல் ஊனமுற்றவர்களுக்கு உடுப்பு வழங்குவதற்குரிய புதிய கட்டிடம் கட்ட 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்ப தற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு